


# LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : September 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Ld Dr. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

Ld Dr. மபால்ராஜ்
Founder | International President

LORDS CLUBS INTERNATIONAL
Govt. Registration Number : 1359 / 2013
International Social Services

இரத்த தானம் செய்வோம்! உயிர் காப்போம்!!

மரம் நடுவோம்! மழை பெறுவோம்!! நிலம் காப்போம்!!!

அன்ன தானம் செய்வோம்! அருள் பெறுவோம்!!

கண் தானம் செய்வோம்! ஒளி கொடுப்போம்!!

கல்வி தானம் செய்வோம்! கல்வி கண் திறப்போம்!!


இந்திய பொருளாதாரம் உயர்த்திடுவோம்! இந்தியர்களை காத்திடுவோம்!!

Ph : 9840559673, 9790855633 Web : www.lordsclubs.com

www.lordsclubs.com



# திருக்குறள்



### 3. நீத்தார் பெருமை

குறள் 21 : ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு

உரை : ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

குறள் 22 : துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

உரை : பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை கணக்கிடுவதைப்போன்றது.

குறள் 23 : இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு

உரை : பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது

குறள் 24 : உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

உரை : அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்




குறள் 25 : ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலுங் கரி

உரை : ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்

குறள் 26 : செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்

உரை : செய்வதற்கு அருமையான செயல்களை செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

குறள் 27 : சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு

உரை : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

குறள் 28 : நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்

உரை : பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.

குறள் 29 : குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது

உரை : நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறி நின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

குறள் 30 : அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்

உரை : எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்
**PART-20**




# தொடக்கநூல் அதிகாரம் 43 திருவிவிலியம்

**பென்யமின் எகிப்துக்குச் செல்லல்**

1 நாட்டில் பஞ்சம் மிகக் கடுமையாய் இருந்தது.

2 எகிப்திலிருந்து வாங்கி வந்திருந்த உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டன. அவர்கள் தந்தை அவர்களை நோக்கி, நீங்கள் திரும்பிப் போய் நமக்குக் கொஞ்சம் உணவுப் பொருள் வாங்கி வாருங்கள் என்றார்.

3 அதற்கு யூதா, அந்த ஆள் உங்கள் இளைய சகோதரனை உங்களுடன் அழைத்து வராவிடில் நீங்கள் என் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று எங்களைக் கடுமையாய் எச்சரித்துள்ளார்.

4 ஆதலால், நீங்கள் எம் சகோதரனை எங்களோடு அனுப்பினால் மட்டுமே நாங்கள் அங்குச் சென்று உணவுப் பொருள்களை உங்களுக்கு வாங்கிக்கொண்டு வருவோம்.

5 நீங்கள் அவனை அனுப்பாவிடில், நாங்கள் போகமாட்டோம். ஏனெனில், அந்த ஆள் உங்கள் சகோதரன் உங்களுடன் வராவிடில், நீங்கள் என் முகத்தில் விழிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்று சொன்னார்.

6 இஸ்ரயேல் அவர்களை நோக்கி, உங்களுக்கு இன்னுமொரு சகோதரன் இருக்கிறான் என்று அம்மனிதருக்குத் தெரிவித்து, நீங்கள் ஏன் எனக்குத் துன்பம் வருவித்தீர்கள் என்று முறையிட்டார்.

7 அவர்கள், அந்த ஆள் நம்மைப்பற்றியும் நம் உறவினரைப்பற்றியும் துருவித் துருவிக் கேட்டார். உங்கள் தந்தை இன்னும் உயிரோடு இருக்கிறாரா? உங்களுக்கு வேறு சகோதரன் உண்டா? என்று வினவினார். அவர் கேட்ட கேள்விகளுக்கு இவ்வாறு பதிலளித்தோம். உங்கள் சகோதரனை இங்கே கொண்டு வாருங்கள் என்று அவர் சொல்வார் என்று நாங்கள் அறிந்திருக்கக் கூடுமோ? என்று மறுமொழி கூறினர்.

8 மேலும், யூதா தம் தந்தை இஸ்ரயேலை நோக்கி, எங்கள் குழந்தைகளும், நீங்களும் நாங்களும் சாகாமல் உயிரோடிருக்க வேண்டுமானால், இளைஞனை என்னோடு அனுப்பி வையுங்கள். நாங்களும் புறப்பட்டுச் செல்வோம்.


9 அவனுக்கு நானே பொறுப்பாளி. அவனைப்பற்றிய பொறுப்பை என்கையில் விட்டுவிடுங்கள். நான் அவனை உங்களிடம் கொண்டுவந்து ஒப்புவிக்காவிடில், உங்களுக்கு முன்பாக, அப்பழியை எந்நாளும் நான் சுமப்பேன்.

10 இவ்வளவு காலந்தாழ்த்தியிராவிட்டால், இதற்குள் இரண்டுமுறை போய்த் திரும்பி வந்திருக்கலாம் என்றார்.

11 அதைக் கேட்டு, அவர்களின் தந்தை இஸ்ரயேல், அவர்களை நோக்கி, அவ்வளவு அவசியமானால், நீங்கள் அப்படியே செய்யுங்கள். ஆனால், இந்த நாட்டின் விளைச்சலில் மிகச் சிறந்த சிலவற்றை உங்கள் பைகளிலே எடுத்துச் செல்லுங்கள். கொஞ்சம் தைல வகைகள், தேன், நறுமணப் பொருள்கள், வெள்ளைப் போளம், தேவதாருக் கொட்டைகள், வாதுமைப் பருப்பு ஆகியவற்றை அம்மனிதருக்குக் காணிக்கையாகக் கொண்டு செல்லுங்கள்.

12 மேலும், இருமடங்கு பணத்தைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் கோணிப்பை வாயில் வைக்கப்பட்டிருந்த பணத்தை நீங்கள் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். ஒரு வேளை அது தவறுதலாய் நேர்ந்திருக்கக்கூடும்.

# BIBLE




13 உங்கள் சகோதரனை அழைத்துக்கொண்டு மீண்டும் அந்த மனிதரிடம் செல்லுங்கள்.

14 அந்த மனிதர் ஏற்கெனவே அங்குள்ள உங்கள் சகோதரனையும் இந்தப் பென்யமினையும் உங்களோடு அனுப்பிவைக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்குக் கருணை காட்டுவாராக! நானோ பிள்ளைகளை இழக்கவேண்டியிருந்தால், பிள்ளைகளை இழந்தவனாகவே இருப்பேன் என்றார்.

15 அவர்களும் மேற்குறிப்பிட்ட காணிக்கைகளையும் இருமடங்கு பணத்தையும் கையில் எடுத்துக் கொண்டு பென்யமினுடன் எகிப்திற்குச் சென்று யோசேப்பின் முன்னிலையில் வந்து நின்றனர்.

16 யோசேப்பு அவர்களையும் அவர்களுடன் பென்யமினையும் கண்டவுடன் தம் வீட்டு மேற்பார்வையாளனை நோக்கி, நீ இம்மனிதர்களை என் வீட்டிற்கு அழைத்துச் செல். இவர்கள் பகலுணவை இன்று என்னோடு உண்பார்கள். கால்நடை ஒன்றை அடித்து உணவு தயார் செய் என்றார்.

17 அவனும் யோசேப்பு சொன்னபடியே அம்மனிதர்களை அவர் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனான்.

18 யோசேப்பின் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டதால் அவர்கள் அச்சமுற்றனர். ஏனெனில், முன்பு நம் கோணிப்பைகளில் வைக்கப்பட்ட பணத்தை முன்னிட்டே இங்குக் கொண்டுவரப்பட்டுள்ளோம். நம்மைத் தாக்கி மடக்கி அடிமைகளாக்கி நம் கழுதைகளைக் கைப்பற்றிக் கொள்ளுமாறு இவ்வாறு கொண்டுவந்திருக்கிறார்களோ? என்று நினைத்துக்கொண்டனர்.

19 எனவே, அவர்கள் யோசேப்பின் வீட்டு வாயிற்படியிலே மேற்பார்வையாளனை அணுகிக் கூறியது:

20 ஐயா, முன்பு ஒருமுறை நாங்கள் தானியம் வாங்குவதற்கும் இங்கு வந்திருந்தது உண்மையே.

21 திரும்பவும் வழியில் சாவடியில் எங்கள் கோணிப்பைகளைத் திறந்தபோது, பைகளின் வாயிலே நாங்கள் கொடுத்த பணம் அப்படியே இருக்கக் கண்டோம். அதே அளவு திரும்பவும் கையோடு கொண்டு வந்திருக்கிறோம்.


22 மேலும், எங்களுக்கு வேண்டியவற்றை வாங்குவதற்கு வேறு பணமும் கையோடு கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள் முன் கொடுத்த பணத்தை எங்கள் கோணிப்பைகளில் வைத்தது யாரென்று அறியோம் என்றனர்.

23 அதற்கு அவன், உங்களுக்கு அமைதி உண்டாகுக! அஞ்சவேண்டாம்! உங்கள் கடவுளும் உங்கள் தந்தையின் கடவுளுமானவர் உங்கள் கோணிப்பைகளில் அந்தப் பணத்தை உங்களுக்குப் புதையலாகத் தந்திருப்பார்! உங்கள் பணம் தான் என்னிடம் வந்ததே! என்று சொல்லியபின், சிமியோனை அவர்களிடம் அழைத்து வந்தான்.

24 மேலும், அந்த மனிதன் அவர்களை யோசேப்பின் வீட்டிற்குள் அழைத்துச் சென்று, அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தான். அவர்கள் தங்கள் பாதங்களைக் கழுவிக் கொண்டனர். பின்பு, அவர்களுடைய கழுதைகளுக்கு அவன் தீனி போட்டான்.

25 நண்பகலில் யோசேப்பு வரும் நேரத்தில், அவருக்குத் தருவதற்காக அவர்கள் தங்கள் காணிக்கைகளைத் தயார் செய்தனர். ஏனென்றால், தாங்கள் அங்கேயே உணவு அருந்தப்போவதாகக் கேள்விப்பட்டிருந்தனர்.

# BIBLE




26 யோசேப்பு தம் வீட்டுக்கு வந்தார். வீட்டுக்குள் அவர்கள் கையில் கொண்டுவந்திருந்த காணிக்கைகளை அவர்முன் வைத்து, தரை மட்டும் தாழ்ந்து வணங்கினர்.

27 அவரோ அவர்களிடம் நலம் விசாரித்தபின் நீங்கள் என்னிடம் சொல்லியிருந்த முதிர்வயதான உங்கள் தந்தை நலமாய் இருக்கிறாரா? இன்னும் உயிரோடிருக்கிறாரா? என்று விசாரித்தார்.

28 அவர்கள், உங்கள் ஊழியராகிய எங்கள் தந்தை நலமுடன் இருக்கிறார். இன்னும் உயிரோடிருக்கிறார் என்று பதில் கூறித் தரைமட்டும் தாழ்ந்து வணங்கினர்.

29 யோசேப்பு கண்களை உயர்த்தி, தம் சகோதரனும், தம் தாயின் மகனுமான பென்யமினைப் பார்த்து, நீங்கள் என்னிடம் சொல்லியிருந்த உங்கள் இளைய சகோதரன் இவன்தானோ? என்று கேட்டபின், மகனே, கடவுள் உனக்கு அருள்புரிவாராக! என்றார்.

30 யோசேப்பு தம் சகோதரனைக் கண்டதும் மனம் நெகிழ்ந்து அழுவதற்கு ஓரிடம் தேடினார். உடனே தம் உள்ளறைக்குள் விரைந்துசென்று கண்ணீர்விட்டார்.

31 பின்பு, முகத்தைக் கழுவியபின் வெளியே வந்தார். தம்மை அடக்கிக்கொண்டு, உணவு பரிமாறுங்கள் என்றார்.

32 யோசேப்பிற்குத் தனியாகவும் சகோதரர்களுக்குத் தனியாகவும் அவருடன் உண்ணவிருந்த எகிப்தியருக்குத் தனியாகவும் உணவு பரிமாறப்பட்டது. ஏனென்றால், எகிப்தியர் எபிரேயரோடு உண்பதில்லை. அப்படி உண்பதை எகிப்தியர் அருவருப்பாகக் கருதினர்.

33 மேலும், அவருக்கு முன் அவர்களில் மூத்தவன் தலைமகன் உரிமைப்படி முதலாவதாகவும், இளையவர்கள் அவரவர் வயதின்படியும் அமர்த்தப்பட்டதால் ஒருவர் மற்றவரை வியப்புடன் நோக்கினர்.

34 யோசேப்பின் முன் வைக்கப்பட்ட தட்டுகளினின்று அவர்களுக்குப் பரிமாறப்பட்டது. மற்றவர்களது பங்கைப்போல் ஐந்து மடங்கு மிகுதியாகப் பென்யமினுக்குப் பரிமாறப்பட்டது. அவருடன் அவர்கள் மதுவருந்தி விருந்துண்டனர்.

## தொடக்கநூல் அதிகாரம் 44 திருவிவிலியம்

### காணாமற்போன வெள்ளிக் கோப்பை

1 பின்னர், யோசேப்பு தம் வீட்டு மேற்பார்வையாளனை நோக்கி, அவர்களுடைய கோணிப்பைகளில் அவர்கள் தூக்கிச் செல்லுமளவு தானியம் நிரப்பி, அவனவன் பணத்தைப் பையின் வாயில் வைத்துக் கட்டிவிடு.

2 இளையவனது கோணிப்பை வாயில் எனது வெள்ளிக்கோப்பையையும், தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தையும் வைத்துக் கட்டிவிடு என்று கட்டளையிட்டார். யோசேப்பு சொன்னவாறே அவனும் செய்தான்.

3 காலையில் கதிரவன் உதித்ததும் அவர்கள் தங்கள் கழுதைகளோடு அனுப்பிவைக்கப்பட்டனர்.

4 அவர்கள் நகரை விட்டுச் சிறிது தூரம் போயிருப்பர். அப்பொழுது யோசேப்பு தம் வீட்டு

# BIBLE




மேற்பார்வையாளனை நோக்கி, நீ எழுந்து அம்மனிதர்களைத் துரத்திப் பிடித்து, நன்மைக்குக் கைமாறாக நீங்கள் தீமை செய்வது ஏன்?

5 இது என் தலைவர் பருகப் பயன்படுத்துவது அல்லவா? இது அவர் குறிபார்க்கப் பயன்படுத்துவது அல்லவா? நீங்கள் செய்தது மிகப்பெரும் மோசடி! என்று சொல்வாய் என்றார்.

6 அவனும் அவர்களை விரட்டிப் பிடித்து, இந்த வார்த்தைகளை அவர்களுக்குச் சொன்னான்.

7 அதற்கு அவர்கள் அவனிடம், ஐயா, தாங்கள் இப்படிப் பேசுவதேன்? உம் அடியார்களாகிய நாங்கள் இத்தகைய முறையற்ற செயலைச் செய்திருப்போமா?

8 நாங்கள் கோணிப்பைகளின் வாயில் கண்ட பணத்தைக் கூடக் கானான் நாட்டினின்று உம்மிடம் திரும்பக் கொண்டு வந்தோம் அல்லவா! அப்படியிருக்க, நாங்கள் உம் தலைவர் வீட்டில் தங்கமாவது வெள்ளியாவது திருடிக்கொண்டு போவோமா?

9 உம் அடியார்களாகிய எம்முள் எவனிடமாவது அது காணப்பட்டால் அவன் செத்தொழியட்டும்! நாங்களும் எங்கள் தலைவருக்கு அடிமைகள் ஆவோம் என்று பதில் சொன்னார்கள்.

10 அதுகேட்டு அவன், நன்று நன்று; உங்கள் சொற்களின்படி ஆகட்டும். அது எவனிடம் அகப்படுமோ அவன் எனக்கு அடிமையாக இருப்பான்; மற்றவர்கள் குற்றமற்றவர்களாய் இருப்பீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னான்.

11 அப்பொழுது அவர்கள் விரைந்து கோணிப்பைகளைத் தரையில் இறக்கிவைத்தார்கள். ஒவ்வொருவனும் தன் கோணிப்பையைத் திறந்தான்.

12 மூத்தவன் முதல் இளையவன்வரை அவன் சோதித்தபோது, அந்தக் கோப்பை பென்யமின் பையில் காணப்பட்டது.

13 அப்பொழுது அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, கழுதைகளின் மேல் சுமையை ஏற்றி நகருக்குத் திரும்பி வந்தனர்.

14 அதுவரை யோசேப்பு அங்கேதான் இருந்தார். யூதா தம் சகோதரருடன் வந்து சேர்ந்தார். அவர்கள் அவருக்குமுன் தரையில் வீழ்ந்து வணங்கினர்.

15 யோசேப்பு அவர்களை நோக்கி, நீங்கள் என்ன, இப்படிச் செய்துவிட்டீர்கள்? குறிபார்ப்பதில் என்னைப் போன்றவர் எவருமிலர் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று வினவினார்.

16 அதற்கு யூதா, என் தலைவராகிய தங்களிடம் நாங்கள் என்ன சொல்வோம்? என்னதான் பேசுவோம்? எங்கள் மாசின்மையை எப்படி நாங்கள் எண்பிக்க முடியும்? கடவுளே உம் அடியார்களின் தீச்செயலைக் கண்டுபிடித்தார். இதோ நாங்களும், எவனிடம் கோப்பை கண்டுபிடிக்கப்பட்டதோ அவனும், தங்களுக்கு அடிமைகளாவோம் என்று சொன்னார்.

17 அது கேட்டு யோசேப்பு, அத்தகைய முறையற்ற செயலை நான் செய்ய மாட்டேன். கோப்பை எவனிடம் அகப்பட்டதோ அவன் மட்டும் எனக்கு அடிமையாக இருப்பான். மற்றவர்கள் உங்கள் தந்தையிடம் நலமாகச் செல்லுங்கள் என்றார்.

# BIBLE




## யூதா பென்யமினுக்காகப் பரிந்து பேசுதல்

18 யூதா அவர் அருகில் வந்து, என் தலைவரே! அடியேன் ஒரு வார்த்தை கூற அனுமதி தாரும். என் தலைவரே! செவிசாய்த்தருளும். உம் அடியான் மீது சினம் கொள்ள வேண்டாம். நீர் பார்வோனுக்கு இணையானவர்.

19 என் தலைவராகிய தாங்கள் உம் பணியாளர்களாகிய எங்களிடம், உங்களுக்குத் தந்தையோ சகோதரனோ உண்டா? என்று கேட்டீர்கள்.

20 அதற்கு நாங்கள், எங்களுக்கு வயது முதிர்ந்த தந்தையும், முதிர்ந்த வயதில் அவருக்குப் பிறந்த ஓர் இளைய சகோதரனும் உள்ளனர். அவனுடைய சகோதரன் இறந்துவிட்டான். அவன் தாயின் பிள்ளைகளில் அவன் ஒருவனே இருப்பதால், தந்தை அவன் மேல் அதிக அன்பு கொண்டிருக்கிறார் என்று தலைவராகிய தங்களுக்குச் சொன்னோம்.

21 அப்பொழுது தாங்கள், அவனை என்னிடம் அழைத்து வாருங்கள். நான் அவனை நேரில் பார்க்க வேண்டும் என்று உம் அடியார்களுக்குச் சொன்னீர்கள்.

22 நாங்கள் அந்த இளைஞன் தன் தந்தையை விட்டுப் பிரிய இயலாது; பிரிந்தால் அவர் இறந்து போவார் என்று தலைவராகிய தங்களிடம் சொன்னோம்.

23 அதற்குத் தாங்கள் உங்கள் இளைய சகோதரன் உங்களோடு வராவிட்டால் என் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று உம் அடியார்களுக்குச் சொன்னீர்கள்.

24 உம் பணியாளராகிய எங்கள் தந்தையிடம் திரும்பியவுடன் என் தலைவராகிய தாங்கள் சொல்லியவற்றை அவரிடம் எடுத்துரைத்தோம்.

25 பிறகு எங்கள் தந்தை, நீங்கள் திரும்பிப்போய் நமக்குக் கொஞ்சம் உணவுப்பொருள் வாங்கி வாருங்கள் என்றார்.

26 நாங்கள் எங்களால், போக இயலாது, எங்கள் இளைய சகோதரன் எங்களோடு சேர்ந்து வந்தால் மட்டுமே புறப்படுவோம். வராவிட்டால், இவன் இல்லாமல் நாங்கள் அவர் முகத்தில் விழிக்க மாட்டோம் என்றோம்.

27 உம் பணியாளராகிய எங்கள் தந்தை எங்களிடம் என் மனைவி, எனக்கு இரு பிள்ளைகளையே பெற்றெடுத்தாளென்று உங்களுக்குத் தெரியும்.

28 ஒருவன் என்னைப் பிரிந்து வெளியே சென்றான். அவன் ஒரு கொடிய விலங்கால் பீறிக்கிழிக்கப்பட்டான் என்று நினைத்துக் கொண்டேன். ஏனெனில், இதுவரை அவனைக் காணவில்லை.

29 இப்பொழுது நீங்கள் இவனையும் என்னிடமிருந்து பிரிக்கிறீர்கள். இவனுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், நரைத்த முடியுள்ள என்னைத் துயருக்குள்ளாகிப் பாதாளத்திற்குள் இறங்கச்செய்வீர்கள் என்றார்.

30 ஆகையால் உம் பணியாளராகிய என் தந்தையிடம் நான் செல்லும்போது அவர் உயிருக்கு உயிராக இருக்கும் இந்த இளைஞன் எங்களோடு இல்லையெனில்,

# BIBLE



31 இளைஞன் இல்லையென்று கண்டு அவர் உடனே இறந்து போவார். உம் பணியாளர்களாகிய நாங்கள் நரைத்த முடியுள்ள உம் ஊழியரான எங்கள் தந்தையைத் துயருக்குள்ளாக்கிப் பாதாளத்திற்குள் இறங்கச் செய்தவர்கள் ஆவோம்.

32 எம் தந்தையிடம் இளைஞனின் பாதுகாப்புக்கு உம் அடியான் பொறுப்பேற்றிருக்கிறேன். ஏனெனில், என் தந்தையே, அவனை நான் திரும்பக் கூட்டி வராவிட்டால், உம் முன்னிலையில் அப்பழி எந்நாளும் என்னையே சாரும் என்றேன்.

33 ஆகையால், இப்பொழுது இளைஞனுக்குப் பதிலாய் அடியேனை உமக்கு அடிமையாக்கியருளும். இளைஞனையோ அவன் சகோதரர்களோடு சேர்ந்து போகவிடும்.

34 இளைஞன் என்னோடு இல்லாவிடில், எப்படி என் தந்தையிடம் நான் திரும்புவேன்? என் தந்தைக்கு நேரிடவிருக்கும் துன்பத்தை எப்படி நான் பார்த்துக் கொண்டிருப்பேன்? என்றார்.

தொடரும்.....


சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்

LORDS CLUBS INTERNATIONAL

25th Years SERVICE

பேரறிஞர் Ld Dr. மபால்ராஜ்

Founder | International President

LORDS CLUBS INTERNATIONAL

International Social Services

Govt. Reg. No. : 1359 / 2013

+91 9840559673 | +91 9790855633

www.lordsclubs.com

World Number 1 SERVICE




இரத்த தானம்
செய்வோம்!
உயிர் காப்போம்!!



மரம் நடுவோம்!
மழை பெறுவோம்!!
நிலம் காப்போம்!!!



அன்ன தானம்
செய்வோம்!
அருள் பெறுவோம்!!




கண் தானம்
செய்வோம்!
ஒளி கொடுப்போம்!!



கல்வி தானம் செய்வோம்!
கல்வி கண்
திறப்போம்!!



இந்திய பொருளாதாரம்
உயர்த்திடுவோம்!
இந்தியர்களை காத்திடுவோம்!!




3:26 وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ۖ الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِى
اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ‏ بِيَدِكَ الْخَيْرُ

3:26. (நபியே!) நீர் கூறுவீராக: “அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய்; இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய்; நீ நாடியோரை கண்ணியப்படுத்துகிறாய்; நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய்; நன்மைகள் யாவும் உன் கைவசமேயுள்ளன அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய்.”

3:27 وَتُخْرِجُ الْحَـىَّ مِنَ الْمَيِّتِ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَـىِّ ۖ تُوْلِجُ الَّيْلَ فِى النَّهَارِ وَتُوْلِجُ النَّهَارَ فِى الَّيْلِ
وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ


3:27. (நாயனே!) நீதான் இரவைப் பகலில் புகுத்துகின்றாய்; நீதான் பகலை இரவிலும் புகுத்துகின்றாய்; மரித்ததிலிருந்து உயிருள்ளதை நீயே வெளியாக்குகின்றாய்; நீயே உயிருள்ளதிலிருந்து மரித்ததையும் வெளியாக்குகின்றாய்; மேலும், நீ நாடியோருக்குக் கணக்கின்றிக் கொடுக்கின்றாய்.

3:28 وَمَنْ يَّفْعَلْ ذٰ لِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِىْ شَىْءٍ اِلَّاۤ اَنْ تَوْنَ الْـكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ‌ۚ لَا يَتَّخِذِ الْمُؤْمِ
تَتَّقُوْا مِنْهُمْ تُقٰٮةً ‌ؕ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ‌ ؕ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ

3:28. முஃமின்கள் (தங்களைப் போன்ற) முஃமின்களையன்றி காஃபிர்களைத் தம் உற்ற துணைவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி (உங்களில்) எவரேனும் அப்படிச் செய்தால், (அவருக்கு) அல்லாஹ்விடத்தில் எவ்விஷயத்திலும் சம்பந்தம் இல்லை; இன்னும், அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களை எச்சரிக்கின்றான்; மேலும், அல்லாஹ்விடமே (நீங்கள்) மீள வேண்டியதிருக்கிறது.

3:29 كُلِّ وَاللّٰهُ عَلٰى وَيَعْلَمُ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ‌ؕ قُلْ اِنْ تُخْفُوْا مَا فِىْ صُدُوْرِكُمْ اَوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللّٰهُ
شَىْءٍ قَدِيْرٌ

3:29. (நபியே!) நீர் கூறும்: “உங்கள் உள்ளத்திலுள்ளதை நீங்கள் மறைத்தாலும், அல்லது அதை வெளிப்படையாகத் தெரியப்படுத்தினாலும் அதை அல்லாஹ் நன்கறிகின்றான்;



இன்னும், வானங்களில் உள்ளதையும், பூமியில் உள்ளதையும் அவன் நன்கறிகின்றான்; அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும் ஆற்றலுடையவன் ஆவான்.”

3:30 تَوَدُّ لَوْ اَنَّ بَيْنَهَا ◌ وَمَا عَمِلَتْ مِنْ سُوْٓءٍ ◌ يَوْمَ تَجِدُ كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ مِنْ خَيْرٍ مُّحْضَرًا
وَاللّٰهُ رَءُوْفٌ ۢ بِالْعِبَادِ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ وَبَيْنَهٗۤ اَمَدًا ۢ بَعِيْدًا

3:30. ஒவ்வோர் ஆத்மாவும், தான் செய்த நன்மைகளும்; இன்னும், தான் செய்த தீமைகளும் அந்த(த் தீர்ப்பு) நாளில் தன் முன்கொண்டு வரப்பட்டதும், அது தான் செய்த தீமைக்கும் தனக்கும் இடையே வெகு தூரம் இருக்க வேண்டுமே என்று விரும்பும்; அல்லாஹ் தன்னைப்பற்றி நினைவு கூறுமாறு உங்களை எச்சரிக்கின்றான்; இன்னும் அல்லாஹ் தன் அடியார்கள் மீது கருணை உடையோனாக இருக்கின்றான்.

3:31 غَفُوْرٌ رَّحِيْمٌ وَاللّٰهُ ؕ قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِىْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَـكُمْ ذُنُوْبَكُمْ

3:31. (நபியே!) நீர் கூறும்: “நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.

3:32 ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ

3:32. (நபியே! இன்னும்) நீர் கூறும்: “அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்துநடங்கள்.” ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் கா∴பிர்களை நேசிப்பதில்லை.


3:33 اِنَّ اللّٰهَ اصْطَفٰۤى اٰدَمَ وَنُوْحًا وَّاٰلَ اِبْرٰهِيْمَ وَاٰلَ عِمْرٰنَ عَلَى الْعٰلَمِيْنَۙ

3:33. ஆதமையும், நூஹையும், இப்ராஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாக தேர்ந்தெடுத்தான்.

3:34 ۚ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ذُرِّيَّةً ۢ بَعْضُهَا مِنْ ۢ بَعْضٍ

3:34. (அவர்களில்) ஒருவர் மற்றவரின் சந்ததியாவார் - மேலும், அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.

3:35 ۚ اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ عِمْرٰنَ رَبِّ اِنِّىْ نَذَرْتُ لَـكَ مَا فِىْ بَطْنِىْ مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّىْ ۚ اِذْ قَالَتِ امْرَاَتُ




3:35. இம்ரானின் மனைவி “என் இறைவனே! என் கர்ப்பத்திலுள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணிக்க நான் நிச்சயமாக நேர்ந்து கொள்கிறேன்; எனவே (இதை) என்னிடமிருந்து நீ ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்” என்று கூறியதையும்-

3:36 وَاِنِّيْ سَمَّيْتُهَا الذَّكَرُ كَالْاُنْثٰى فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ اِنِّىْ وَضَعْتُهَآ اُنْثٰى وَاللّٰهُ اَعْلَمُ بِمَا وَضَعَتْ وَ لَيْسَ
مَرْيَمَ وَاِنِّىْٓ اُعِيْذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

3:36. (பின், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும்: “என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கிறேன்” எனக் கூறியதையும் நினைவு கூறுங்கள்; அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான்; ஆண், பெண்ணைப் போலல்ல (மேலும் அந்தத்தாய் சொன்னாள்:) “அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்; இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி(ன் தீங்குகளி)லிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன்.

3:37 كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا الْمِحْرَابَ وَجَدَ فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُوْلٍ حَسَنٍ وَّاَنْۢبَتَهَا نَبَاتًا حَسَنًا وَّكَفَّلَهَا زَكَرِيَّا
اِنَّ اللّٰهَ يَرْزُقُ مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ قَالَتْ هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ نّٰى لَكِ هٰذَا قَالَ يٰمَرْيَمُ اَ عِنْدَهَا رِزْقًا

3:37. அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக் கொண்டான்; அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான்; அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக்கொள்ளும்படி செய்தான். ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம், அவளிடம் உணவு இருப்பதைக் கண்டார், “மர்யமே! இ(வ்வுணவான)து உனக்கு எங்கிருந்து வந்தது?” என்று அவர் கேட்டார்; “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது - நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்” என்று அவள்(பதில்) கூறினாள்.



3:38 هُنَالِكَ دَعَا زَكَرِيَّا رَبَّهُ قَالَ رَبِّ هَبْ لِي مِنْ لَدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۖ إِنَّكَ سَمِيعُ الدُّعَاءِ

3:38. அந்த இடத்திலேயே ஜகரிய்யா தம் இறைவனிடம் பிரார்த்தனை செய்தவராகக் கூறினார் “இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய்.”

3:39 يُصَلِّي فِي الْمِحْرَابِ أَنَّ اللَّهَ يُبَشِّرُكَ بِيَحْيَىٰ مُصَدِّقًا بِكَلِمَةٍ مِنَ اللَّهِ وَسَيِّدًا فَنَادَتْهُ الْمَلَائِكَةُ وَهُوَ قَائِمٌ
وَحَصُورًا وَنَبِيًّا مِنَ الصَّالِحِينَ


3:39. அவர் தம் அறையில் நின்று தொழுது கொண்டிருந்தபோது, மலக்குகள் அவரை சப்தமாக அழைத்து: “நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா (எனும் பெயருள்ள மகவு குறித்து) நன்மாராயங் கூறுகின்றான்; அவர் அல்லாஹ்விடமிருந்து ஒரு வார்த்தையை மெய்ப்பிப்பவராகவும், கண்ணியமுடையவராகவும், ஒழுக்க நெறி பேணிய (தூய)வராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்” எனக் கூறினர்.

3:40 قَالَ كَذَٰلِكَ اللَّهُ يَفْعَلُ مَا يَشَاءُ يَكُونُ لِي غُلَامٌ وَقَدْ بَلَغَنِيَ الْكِبَرُ وَامْرَأَتِي عَاقِرٌ قَالَ رَبِّ أَنَّىٰ يَ

3:40. அவர் கூறினார்: “என் இறைவனே! எனக்கு எப்படி மகன் ஒருவன் உண்டாக முடியும்? எனக்கு வயது அதிகமாகி (முதுமை வந்து) விட்டது; என் மனைவியும் மலடாக இருக்கின்றாள்;” அதற்கு (இறைவன்), “அவ்வாறே நடக்கும்; அல்லாஹ் தான் நாடியதைச் செய்து முடிக்கின்றான்” என்று கூறினான்.

3:41 كَثِيرًا وَسَبِّحْ وَاذْكُرْ رَبَّكَ ۗ قَالَ آيَتُكَ أَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلَاثَةَ أَيَّامٍ إِلَّا رَمْزًا قَالَ رَبِّ اجْعَلْ لِي آيَةً
| بِالْعَشِيِّ وَالْإِبْكَارِ

3:41. “என் இறைவனே! (இதற்கான) ஓர் அறிகுறியை எனக்குக் கொடுத்தருள்வாயாக!” என்று (ஜகரிய்யா) கேட்டார். அதற்கு (இறைவன்), “உமக்கு அறிகுறியாவது: மூன்று நாட்களுக்குச் சைகைகள் மூலமாக அன்றி நீர் மக்களிடம் பேசமாட்டீர்! நீர் உம் இறைவனை அதிகமதிகம் நினைவு கூர்ந்து; அவனைக்



காலையிலும் மாலையிலும் போற்றித் துதிப்பீராக!" என்று கூறினான்.

وَاِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ اللّٰهَ اصْطَفٰىكِ وَطَهَّرَكِ وَاصْطَفٰىكِ عَلٰى نِسَآءِ الْعٰلَمِيْنَ 3:42

3:42. (நபியே! மர்யமிடத்தில்) மலக்குகள்; மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்; உம்மைத் தூய்மையாகவும் ஆக்கியிருக்கிறான்; இன்னும் உலகத்திலுள்ள பெண்கள் யாவரையும் விட (மேன்மையாக) உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்" (என்றும்),

يَمْ اقْنُتِىْ لِرَبِّكِ وَاسْجُدِىْ وَارْكَعِىْ مَعَ الرّٰكِعِيْنَ يمَرْ 3:43

3:43. "மர்யமே! உம் இறைவனுக்கு ஸுஜுது செய்தும், ருகூ்ஃ செய்வோருடன் ருகூ்ஃ செய்தும் வணக்கம் செய்வீராக" (என்றும்) கூறினர்.


وَمَا كُنْتَ لَدَيْهِمْ □ كُنْتَ لَدَيْهِمْ اِذْ يُلْقُوْنَ اَقْلَامَهُمْ اَيُّهُمْ يَكْفُلُ مَرْيَمَ وَمَاذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْغَيْبِ نُوْحِيْهِ اِلَيْكَ 3:44
اِذْ يَخْتَصِمُوْنَ

3:44. (நபியே!) இவை(யெல்லாம்) மறைவானவற்றில் நின்றுமுள்ள விஷயங்களாகும்; இவற்றை நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிக்கின்றோம்; மேலும், மர்யம் யார் பொருப்பில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி (குறி பார்த்தறிய) தங்கள் எழுது கோல்களை அவர்கள் எறிந்த போது நீர் அவர்களுடன் இருக்கவில்லை; (இதைப்பற்றி) அவர்கள் விவாதித்த போதும் நீர் அவர்களுடன் இருக்கவில்லை.

اسْمُهُ الْمَسِيْحُ عِيْسَى ابْنُ مَرْيَمَ وَجِيْهًا فِى الدُّنْيَا □ اللّٰهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ اِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ 3:45
وَالْاٰخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِيْنَ

3:45. மலக்குகள் கூறினார்கள்; "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ்; மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார்;

وَكَهْلًا وَّمِنَ الصّٰلِحِيْنَ وَيُكَلِّمُ النَّاسَ فِى الْمَهْدِ 3:46




3:46. “மேலும், அவர் (குழந்தையாகத்) தொட்டிலில் இருக்கும்போதும், (பால்யம் தாண்டி) முதிர்ச்சியடைந்த பருவத்திலும் அவர் மக்களுடன் பேசுவார்; இன்னும் (நல்லொழுக்கமுடைய) சான்றோர்களில் ஒருவராகவும் அவர் இருப்பார்.”

3:47 قَالَتْ رَبِّ أَنّٰى يَكُوْنُ لِىْ وَلَدٌ وَّلَمْ يَمْسَسْنِىْ بَشَرٌ ؕ قَالَ كَذٰلِكِ اللّٰهُ يَخْلُقُ مَا يَشَآءُ ؕ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا
يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ

3:47. (அச்சமயம் மர்யம்) கூறினார்: “என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?” (அதற்கு) அவன் கூறினான்: “அப்படித்தான் அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் “ஆகுக” எனக் கூறுகிறான், உடனே அது ஆகி விடுகிறது.”

3:48 وَيُعَلِّمُهُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ

3:48. இன்னும் அவருக்கு அவன் வேதத்தையும், ஞானத்தையும், தவ்ராத்தையும், இன்ஜீலையும் கற்றுக் கொடுப்பான்.

தொடரும்.....




உலகமே ஒரு நாடக மேடை
நாமெல்லாம் அதில் நடிகர்கள்...

அறிஞர்
**C.N. அண்ணாதுரை**
தமிழ்நாடு தலைவர் & நிறுவனர்
**திராவிட முன்னேற்றக் கழகம்**




வாழ்க்கையே ஒரு விளையாட்டு
நாமெல்லாம் அதில் விளையாட்டு வீரர்கள்...
Life is a Game
and we are all Players in it...

பேரறிஞர்
Ld Dr. மபால்ராஜ்
சர்வதேச தலைவர் & நிறுவனர்
சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்
**LORDS CLUBS INTERNATIONAL**






**सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम् ।**
**वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः ॥२१॥**


புத்தியால் தீண்டத்தக்கதும் புலன்களைக் கடந்து நிற்பதுமாகிய பேரின்பத்தை எங்கு காண்பானோ, எங்கு நிலை பெறுவதால் இவன் உண்மையினின்றும் வழுவுவதில்லையோ, 21

**यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।**
**यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥**

எதனை யெய்தியபின் அதைக்காட்டிலும் பெரிய லாபம் வேறிருப்பதாகக் கருதமாட்டானோ, எங்கு நிலை பெறுவதாய் பெரிய துக்கத்தாலும் சலிப் பெய்தமாட்டானோ, 22

**तं विद्याद् दुःखसंयोगं वियोगं योगसंज्ञितम् ।**
**स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्णचेतसा ॥**

அந் நிலையே துன்பத்துடன் கலத்தலை விடுதலாகிய யோகநிலை யென்று உணர். உள்ளத்தில் ஏக்கமின்றி உறுதியுடன் அந்த யோகத்தை ஒருவன் பற்றி நிற்கக் கடவான். 23







सङ्कल्पप्रभवान् कामां-
स्त्यक्त्वा सर्वानशेषतः।
मनसैवेन्द्रियग्रामं
विनियम्य समन्ततः ॥ २४ ॥

* ஸங்கல்பத்தினின்றும் எழும் எல்லா விருப்பங்களையும் மிச்சமறத் துறந்துவிட்டு, எல்லாப் பக்கங்களிலும் மனதால் இந்திரியக் குழாத்தைக் கட்டுப்படுத்தி, 24

शनैःशनैरुपरमेद्
बुद्ध्या धृतिगृहीतया।
आत्मसंस्थं मनः कृत्वा
न किञ्चिदपि चिन्तयेत् ॥ २५ ॥

துணிந்த மதியுடன் மனதை ஆத்மாவில் நிறுத்தி, மெல்ல மெல்ல ஆறுதல் பெறக் கடவான்; எதற்கும் கவலையுறாதிருக்கக் கடவான். 25

* ஸங்கல்பம் - மனத்தீர்மானம்,






**यतो यतो निश्चरति मनश्चञ्चलमस्थिरम् ।**
**ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥ २६ ॥**


எங்கெங்கே மனம் சஞ்சலமாய் உறுதி யின்றி உழலுகிறதோ, அங்கங்கே அதைக் கட்டுப் படுத்தி ஆத்மாவுக்கு வசமாக்கிக்கொள்க. 26

**प्रशान्तमनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।**
**उपैति शान्तरजसं ब्रह्मभूतमकल्मषम् ॥ २७ ॥**

மனம் சாந்தமாய், ரஜோ குணம் ஆறி, மாசு நீங்கி ப்ரம்மமே யாகிய இந்த யோகிக்கு மிகச் சிறந்த இன்பம் கிடைக்கிறது. 27

**युञ्जन्नेवं सदात्मानं योगी विगतकल्मषः ।**
**सुखेन ब्रह्मसंस्पर्शमत्यन्तं सुखमश्नुते ॥ २८ ॥**

குற்றங்களைப் போக்கி இங்ஙனம் எப்போதும் ஆத்மாவில் கலப்புற்றிருப்பானாயின், அந்த யோகி ப்ரம்மத்தைத் தொடுவதாகிய மிகவுயர்ந்த இன்பத்தை எளிதில் துய்க்கிறான். 28






**सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।**
**ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ॥ २९ ॥**

யோகத்தில் கலந்தவன் எங்கும் ஸமப்பார்வை
யுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானி
ருப்பதையும் தன்னுள் எல்லா உயிர்களு மிருப்
பதையும் காணுகிறான். 29


**यो मां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।**
**तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ॥ ३०**

எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்
லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறா
னோ, அவனுக்கு நான் அழியமாட்டேன்; எனக்
கவன் அழியமாட்டான். 30

**सर्वभूतस्थितं यो मां भजत्येकत्वमास्थितः ।**
**सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ॥ ३१**

ஒருமையில் நிலை கொண்டவனாய் எல்லா
உயிர்களிடத்திலுள்ள என்னைத் தொழுவோன்,
யாங்கணும் சென்றபோதிலும், அந்த யோகி
என்னுள்ளேயே இயலுகிறான். 31

# BHAGAVAD GITA






आत्मौपम्येन सर्वत्र
समं पश्यति योऽर्जुन ।
सुखं वा यदि वा दुःखं
स योगी परमो मतः ॥ ३२ ॥


இன்பமாயினும், துன்பமாயினும்—எதிலும்
ஆத்மஸமத்வம் பற்றி ஸமப் பார்வை செலுத்து
வானாயின், அவன் பரமயோகியாகக் கருதப்படு
வான். 32

अर्जुन उवाच—

योऽयं योगस्त्वया प्रोक्तः
साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि
चञ्चलत्वात् स्थितिं स्थिराम् ॥ ३३ ॥

அர்ஜுனன் சொல்லுகிறன்—

மதுஸூதனா, இங்ஙனம் நீ ஸமத்வத்தால் ஏற்
படுவதாகச் சொல்லிய யோகம் ஸ்திரமான நிலை
யுடையதாக எனக்குத் தோன்றவில்லை, எனது
சஞ்சலத்தன்மையால். 33






**चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद् दृढम् ।**
**तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥३४॥**

கண்ணா, மனம் சஞ்சலமுடையது; தவறு
மியல்பினது, வலிது; உரனுடையது. அதைக்
கட்டுப்படுத்துதல் காற்றைக் கட்டுவதுபோல்
மிகவும் கஷ்டமான செய்கை யென்று நான்
மதிக்கிறேன். 34

**श्रीभगवानुवाच—**

**असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।**
**अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥३५॥**

பகவான் சொல்லுகிறான்—

பெருந்தோளாய், மனம் கட்டுதற் கரிதுதான்.
சலன முடையதுதான்; ஐயமில்லை. ஆனால்,
குந்தியின் மகனே, அதை பழக்கத்தாலும், விருப்
பின்மையாலும் கட்டிவிடலாம். 35

தொடரும்.....

# Airplane History




In 1799, George Cayley set forth the concept of the modern airplane as a fixed-wing flying machine with separate systems for lift, propulsion, and control. Cayley was building and flying models of fixed-wing aircraft as early as 1803, and he built a successful passenger-carrying glider in 1853.

An airplane or aeroplane (informally plane) is a fixed-wing aircraft that is propelled forward by thrust from a jet engine, propeller, or rocket engine. Airplanes come in a variety of sizes, shapes, and wing configurations. The broad spectrum of uses for airplanes includes recreation, transportation of goods and people, military, and research. Worldwide, commercial aviation transports more than four billion passengers annually on airliners[1] and transports more than 200 billion tonne-kilometers[2] of cargo annually, which is less than 1% of the world's cargo movement.[3] Most airplanes are flown by a pilot on board the aircraft, but some are designed to be remotely or computer-controlled such as drones.

The Wright brothers invented and flew the first airplane in 1903, recognized as "the first sustained and controlled heavier-than-air powered flight".[4] They built on the works of George Cayley dating from 1799, when he set forth the concept of the modern airplane (and later built and flew models and successful passenger-carrying gliders)[5] and the work of German pioneer of human aviation Otto Lilienthal, who, between 1867 and 1896, also studied heavier-than-air flight. Lilienthal's flight attempts in 1891 are seen as the beginning of human flight.[6] Following its limited use in World War I, aircraft technology continued to develop. Airplanes had a presence in all the major battles of World War II. The first jet aircraft was the German Heinkel He 178 in 1939. The first jet airliner, the de Havilland Comet, was introduced in 1952. The Boeing 707, the first widely successful commercial jet, was in commercial service for more than 50 years, from 1958 to at least 2013.

# Brief History of Computers



The naive understanding of computation had to be overcome before the true power of computing could be realized. The inventors who worked tirelessly to bring the computer into the world had to realize that what they were creating was more than just a number cruncher or a calculator. They had to address all of the difficulties associated with inventing such a machine, implementing the design, and actually building the thing. The history of the computer is the history of these difficulties being solved.

19th Century

1801 – Joseph Marie Jacquard, a weaver and businessman from France, devised a loom that employed punched wooden cards to automatically weave cloth designs.

1822 – Charles Babbage, a mathematician, invented the steam-powered calculating machine capable of calculating number tables. The “Difference Engine” idea failed owing to a lack of technology at the time.

1848 – The world’s first computer program was written by Ada Lovelace, an English mathematician. Lovelace also includes a step-by-step tutorial on how to compute Bernoulli numbers using Babbage’s machine.

1890 – Herman Hollerith, an inventor, creates the punch card technique used to calculate the 1880 U.S. census. He would go on to start the corporation that would become IBM.

Early 20th Century

1930 – Differential Analyzer was the first large-scale automatic general-purpose mechanical analogue computer invented and built by Vannevar Bush.

1936 – Alan Turing had an idea for a universal machine, which he called the Turing machine, that could compute anything that could be computed.

1939 – Hewlett-Packard was discovered in a garage in Palo Alto, California by Bill Hewlett and David Packard.

1941 – Konrad Zuse, a German inventor and engineer, completed his Z3 machine, the world’s first digital computer. However, the machine was destroyed during a World War II bombing strike on Berlin.

1941 – J.V. Atanasoff and graduate student Clifford Berry devise a computer capable of solving 29 equations at the same time. The first time a computer can store data in its primary memory.

1945 – University of Pennsylvania academics John Mauchly and J. Presper Eckert create an Electronic Numerical Integrator and Calculator (ENIAC). It was Turing-complete and capable of solving “a vast class of numerical problems” by reprogramming, earning it the title of “Grandfather of computers.”

1946 – The UNIVAC I (Universal Automatic Computer) was the first general-purpose electronic digital computer designed in the United States for corporate applications.

1949 – The Electronic Delay Storage Automatic Calculator (EDSAC), developed by a team at the University of Cambridge, is the “first practical stored-program computer.”

1950 – The Standards Eastern Automatic Computer (SEAC) was built in Washington, DC, and it was the first stored-program computer completed in the United States.

Late 20th Century

1953 – Grace Hopper, a computer scientist, creates the first computer language, which becomes known as COBOL, which stands for COmmon, Business-Oriented Language. It allowed a computer user to offer the computer instructions in English-like words rather than numbers.

1954 – John Backus and a team of IBM programmers created the FORTRAN programming language, an acronym for FORmula TRANslation. In addition, IBM developed the 650.

1958 – The integrated circuit, sometimes known as the computer chip, was created by Jack Kirby and Robert Noyce.

1962 – Atlas, the computer, makes its appearance. It was the fastest computer in the world at the time, and it pioneered the concept of “virtual memory.”

1964 – Douglas Engelbart proposes a modern computer prototype that combines a mouse and a graphical user interface (GUI).

1969 – Bell Labs developers, led by Ken Thompson and Dennis Ritchie, revealed UNIX, an operating system developed in the C programming language that addressed program compatibility difficulties.

1970 – The Intel 1103, the first Dynamic Access Memory (DRAM) chip, is unveiled by Intel.

1971 – The floppy disc was invented by Alan Shugart and a team of IBM engineers. In the same year, Xerox developed the first laser printer, which not

only produced billions of dollars but also heralded the beginning of a new age in computer printing.

1973 – Robert Metcalfe, a member of Xerox's research department, created Ethernet, which is used to connect many computers and other gear.

1974 – Personal computers were introduced into the market. The first were the Altair Scelbi & Mark-8, IBM 5100, and Radio Shack's TRS-80.

1975 – Popular Electronics magazine touted the Altair 8800 as the world's first minicomputer kit in January. Paul Allen and Bill Gates offer to build software in the BASIC language for the Altair.

1976 – Apple Computers is founded by Steve Jobs and Steve Wozniak, who expose the world to the Apple I, the first computer with a single-circuit board.

1977 – At the first West Coast Computer Faire, Jobs and Wozniak announce the Apple II. It has colour graphics and a cassette drive for storing music.

1978 – The first computerized spreadsheet program, VisiCalc, is introduced.

1979 – WordStar, a word processing tool from MicroPro International, is released.

1981 – IBM unveils the Acorn, their first personal computer, which has an Intel CPU, two floppy drives, and a colour display. The MS-DOS operating system from Microsoft is used by Acorn.

1983 – The CD-ROM, which could carry 550 megabytes of pre-recorded data, hit the market. This year also saw the release of the Gavilan SC, the first portable computer with a flip-form design and the first to be offered as a "laptop."

1984 – Apple launched Macintosh during the Superbowl XVIII commercial. It was priced at $2,500

1985 – Microsoft introduces Windows, which enables multitasking via a graphical user interface. In addition, the programming language C++ has been released.

1990 – Tim Berners-Lee, an English programmer and scientist, creates HyperText Markup Language, widely known as HTML. He also coined the term "WorldWideWeb." It includes the first browser, a server, HTML, and URLs.

1993 – The Pentium CPU improves the usage of graphics and music on personal computers.

1995 – Microsoft's Windows 95 operating system was released. A $300 million promotional campaign was launched to get the news out. Sun Microsystems introduces Java 1.0, followed by Netscape Communications' JavaScript.

1996 – At Stanford University, Sergey Brin and Larry Page created the Google search engine.

1998 – Apple introduces the iMac, an all-in-one Macintosh desktop computer. These PCs cost $1,300 and came with a 4GB hard drive, 32MB RAM, a CD-ROM, and a 15-inch monitor.

1999 – Wi-Fi, an abbreviation for "wireless fidelity," is created, originally covering a range of up to 300 feet.

21st Century

2000 – The USB flash drive is first introduced in 2000. They were speedier and had more storage space than other storage media options when used for data storage.

2001 – Apple releases Mac OS X, later renamed OS X and eventually simply macOS, as the successor to its conventional Mac Operating System.

2003 – Customers could purchase AMD's Athlon 64, the first 64-bit CPU for consumer computers.

2004 – Facebook began as a social networking website.

2005 – Google acquires Android, a mobile phone OS based on Linux.

2006 – Apple's MacBook Pro was available. The Pro was the company's first dual-core, Intel-based mobile computer.

Amazon Web Services, including Amazon Elastic Cloud 2 (EC2) and Amazon Simple Storage Service, were also launched (S3)

2007 – The first iPhone was produced by Apple, bringing many computer operations into the palm of our hands. Amazon also released the Kindle, one of the first electronic reading systems, in 2007.

2009 – Microsoft released Windows 7.

2011 – Google introduces the Chromebook, which runs Google Chrome OS.

2014 – The University of Michigan Micro Mote (M3), the world's smallest computer, was constructed.

2015 – Apple introduces the Apple Watch. Windows 10 was also released by Microsoft.

2016 – The world's first reprogrammable quantum computer is built.

Types of Computers

Analog Computers – Analog computers are built with various components such as gears and levers, with no electrical components. One advantage of analogue computation is that designing and building an analogue computer to tackle a specific problem can be quite straightforward.

Digital Computers – Information in digital computers is represented in discrete form, typically as sequences of 0s and 1s (binary digits, or bits). A digital computer is a system or gadget that can process any type of information in a matter of seconds. Digital computers are categorized into many different types. They are as follows:

Mainframe computers – It is a computer that is generally utilized by large enterprises for mission-critical activities such as massive data processing. Mainframe computers were distinguished by massive storage capacities, quick components, and powerful computational capabilities. Because they were complicated systems, they were managed by a team of systems programmers who had sole access to the computer. These machines are now referred to as servers rather than mainframes.

Supercomputers – The most powerful computers to date are commonly referred to as supercomputers. Supercomputers are enormous systems that are purpose-built to solve complicated scientific and industrial problems. Quantum mechanics, weather forecasting, oil and gas exploration, molecular modelling, physical simulations, aerodynamics, nuclear fusion research, and cryptoanalysis are all done on supercomputers.

Minicomputers – A minicomputer is a type of computer that has many of the same features and capabilities as a larger computer but is smaller in size. Minicomputers, which were relatively small and affordable, were often employed in a single department of an organization and were often dedicated to a specific task or shared by a small group.

Microcomputers – A microcomputer is a small computer that is based on a microprocessor integrated circuit, often known as a chip. A microcomputer is a system that incorporates at a minimum a microprocessor, program memory, data memory, and input-output system (I/O). A microcomputer is now commonly referred to as a personal computer (PC).

Embedded processors – These are miniature computers that control electrical and mechanical processes with basic microprocessors. Embedded processors are often simple in design, have limited processing capability and I/O capabilities, and need little power. Ordinary microprocessors and microcontrollers are the two primary types of embedded processors. Embedded processors are employed in systems that do not require the computing capability of traditional devices such as desktop computers, laptop computers, or workstations.

# உறுப்பினர்கள் தேவை

LORDS

CLUBS INTERNATIONAL

சர்வதேச மனிதக் கடவுள்கள் சங்கங்கள்

# LORDS
## CLUBS INTERNATIONAL

Govt. Registration Number : 1359 / 2013

**International Social Services**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்த தானம் செய்வோம்! உயிர் காப்போம்!! | மரம் நடுவோம்! மழை பெறுவோம்!! நிலம் காப்போம்!!! | அன்ன தானம் செய்வோம்! அருள் பெறுவோம்!! | கண் தானம் செய்வோம்! ஒளி கொடுப்போம்!! | கல்வி தானம் செய்வோம்! கல்விக் கண் திறப்போம்!! | இந்தியப் பொருளாதாரம் உயர்த்திடுவோம்! இந்தியர்களைக் காத்திடுவோம்!! |

## சமூக சேவை செய்ய ஆர்வமுள்ள ஆண் / பெண் சமூக சேவகர்கள், உலகெங்கும் ஊர் நகர் வாரியாகத் தேவை



**Call Us : 9840559673, 9790855633**

**Web : www.lordsclubs.com**